Registered as a Newspaper

YOUR FRIENDS
IN
FINANCE
SHABRA
நிதித்துறையில் உங்கள்
நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
UNICO FINANCE LTD.

உதயன்

விலை:
ரூ. 1-25

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

சுடர் 2 யாழ்ப்பாணம் பிரபவ ௵ சித்திரை ௴ 22 ௳ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1407 றம்ழான் பிறை 06 (05-05-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 135

YOUR FRIENDS
IN
FINANCE
SHABRA
நிதித்துறையில் உங்கள்
நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
UNICO FINANCE LTD.

இன்று எதிர்ப்புதினம்

யாழ்ப்பாணம், மே 5

யாழ் ஆஸ்பத்திரியை மூடிவிடுமாறு அரசாங்கம் விடுத்திருக்கும் உத்தரவை ஆட்சேபித்து இன்று எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வடபிராந்திய மினி பஸ் சேவைச் சங்கம் முடிவு செய்திருக்கிறது.

எதிர்ப்புத் தின நடவடிக்கைகள் தொடர்பாக சகல மினி பஸ் உரிமையாளர்கள், ஊழியர்கள், பஞ்சாயத்துச் சபைத் தலைவர்கள் ஆகியோரை இன்று யாழ் ஆஸ்பத்திரி முன்பாகக் கூடுமாறு மினி பஸ் சேவைச் சங்கத் தலைவர் பொன். மதிமுகராசா கோரிக்கை விடுத்திருக்கிறார். (உ)

மினி பஸ் சேவைகள் இன்று நடைபெறா

யாழ்ப்பாணம், மே 5

யாழ் ஆஸ்பத்திரியை மூடும் அரசின் திட்டத்துக்கு ஆட்சேபம் தெரிவித்து வட பிராந்திய மினி பஸ் சேவைச் சங்கம் நடத்தும் எதிர்ப்புத் தினம் காரணமாக இன்று வடக்கில் மினி பஸ்கள் ஓடாது.

--இப்படி சங்கத்தின் தலைவர் திரு பொன். மதிமுகராசா விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

ஆஸ்பத்திரி ஊழியர் இன்று ஊர்வலம்

யாழ்ப்பாணம், மே 5

யாழ் ஆஸ்பத்திரி ஊழியர்கள், உபரதிகாரிகள் கலந்துகொள்ளும் மௌன ஊர்வலம் ஒன்று இன்று நடைபெறவுள்ளது.

யாழ் பெரியாஸ்பத்திரியை அரசு மூடிவிடுமாறு உத்தரவிட்டதையடுத்தே இந்த ஊர்வலம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இன்று காலை 9 மணியளவில் யாழ் ஆஸ்பத்திரி வெளி நோயாளர் பகுதியில் இருந்து ஆரம்பமாகும் ஊர்வலம் ஆஸ்பத்திரி வீதியூடாகச் சென்று யாழ் செயலகத்தைச் சென்றடையும்.

யாழ் ஆஸ்பத்திரியை மூடிவிடுமாறு காலக்கெடு விதித்திருக்கும் அரசின் உத்தரவை வாபஸ்பெறக் கோரி அரச அதிபரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்படும்.

இந்த ஊர்வலத்தில் பொதுமக்களும் பங்குகொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. (உ-10)

அதிர்ச்சி, ஆட்சேபம்

யாழ்ப்பாணம், மே 5

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியை எட்டாம் திகதிக்கு முன் மூடிவிடுமாறு அரசு விடுத்திருக்கும் உத்தரவு குறித்து ஆஸ்பத்திரியின் உபரதிகாரிகள், டாக்டர்கள் ஊழியர்கள் அதிர்ச்சியும் ஆட்சேபமும் தெரிவித்துள்ளனர்.

ஊழியர்களின் ஆட்சேபத்தைத் தெரிவிக்கும் கடிதம் ஒன்று யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளரினூடாக அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

யாழ் ஆஸ்பத்திரியை மூடிவிடுவது இலேசான காரியமல்ல.

கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியுள்ள பொருட்கள் யாழ் ஆஸ்பத்திரியில் இருக்கின்றன.

யாழ் ஆஸ்பத்திரியில் இருக்கும் வசதிகள் வேறு வைத்தியசாலைகளில் கிடையாது. எனவே, அரசு இந்த உத்தரவை மறுபரிசிலனை செய்ய வேண்டும்.

—இவ்வாறு அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது. (உ-10)

கிளினிக் நோயாளர்களின் பதிவுக் கொப்பிகள் மீள ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், மே 5

யாழ்-வைத்தியசாலை கிளினிக்குகளில் சிகிச்சை பெறும் சகல நோயாளர்களும் தமது பதிவுக் கொப்பிகளை ஆஸ்பத்திரிக்கு வந்து பெற்றுச் செல்லுமாறு பணிப்பாளர் டாக்டர் என். நச்சினார்க்கினியன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்-ஆஸ்பத்திரியை அரசு மூடிவிடுமாறு உத்தரவிட்டதையடுத்தே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சகல கிளினிக்குகளுக்கும் வரும் நோயாளர்கள் எட்டாம் திகதிக்கு முன்னர் வந்து கொப்பிகளை எடுத்துச்சென்று வேறு வைத்தியசாலைகளில் அதற்கான மருந்துவகைகளை பெற்றுக்கொள்ளுமாறும் அவர் அறிவித்துள்ளார். (உ-10)

அரசின் உத்தரவு வாபஸாகும் வரை அரச நிறுவனங்கள் செயலிழக்கும்

போர்க்கொடி உயருகிறது

யாழ்ப்பாணம், மே 5

தமிழ் மக்களை பூண்டோடொழிக்கும் திட்டத்துடன் யாழ் ஆஸ்பத்திரியை மூட அரசு முயற்சிக்கிறது. அரசு இந்த உத்தரவை வாபஸ் பெறும்வரை அரச நிறுவனங்கள் அனைத்தையும் செயலிழக்கச்செய்யும் போராட்டத்தில் நம் ஈடுபடுவோம்

— இப்படி யாழ் அரசினர் பொது வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கம் விடுத்த அறிக்கை ஒன்றில் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் போராட்டத்திற்கு அனைத்து மக்களின் ஒத்துழைப்பையும் சங்கம் கோரியிருக்கிறது

ஹிட்லரை விடக் கொடூரமான ஜே. ஆர். அரசு வைத்தியசாலைகளைத் திட்டமிட்டே அழித்து வருகிறது

மன்னார்- பள்ளமேடு, மட்டக்களப்பு- மகிழடித்தீவு, அம்பாறை, திருக்கோயில் ஆஸ்பத்திரிகள் இராணுவ முகாம்களாகியுள்ளன

மன்னார், அடம்பன் ஆஸ்பத்திரி பாரியளவு வீச்சுத் தாக்குதலினால் சேதமாக்கப்பட்டுள்ளது,

இந்த வகையில் தமிழர்களின் வைத்திய சேவையை முற்று முழுதாகத் தடுக்க யாழ் ஆஸ்பத்திரியை அரசு மூட முயல்கிறது.

— இப்படி சங்கம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது

(மற்றொரு அறிக்கை 4 ஆம் பக்கத்தில்) (உ)

முச்சந்தி முனி



அறிக்கைகளும், எச்சரிக்கைகளும், பதிலுகளும் வருதே ஒழிய இலங்கை அப்பாவித் தமிழர்கள் சாகிறதும், ஷெல்லுகளும், குண்டுகள் விழுகிறதும் தொடர்ந்துகொண்டு தான் இருக்குது...!

ஆஸ்பத்திரியை மூடுவதை தலையிட்டு தடுக்குக!

இந்திய அரசிடம் பொது ஸ்தாபனங்கள் வேண்டுதல்

— அலுவலகச் செய்தியாளர் க இரத்தினராஜசிங்கம் —

யாழ்ப்பாணம், மே 5

வடமாகாணம் வாழ் இருபது லட்சத்துக்கும் அதிகமான தமிழ் மக்களின் கேந்திர பெரியாஸ்பத்திரியாக விளங்கும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையை மூடுவதைத் தலையிட்டுத் தடுக்குக. ஆஸ்பத்திரியை மூடிவிடுவதென்ற முடிவை ரத்துச்செய்யுமாறு ஸ்ரீலங்கா அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கவும்.

யாழ்-ஆஸ்பத்தரி மூடப்பட்டால் வடமாகாணத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் வைத்திய வசதிகளை இழந்து உயிரிழக்க நேரிடும். இதனை ஒரு மனிதாபிமானப் பிரச்சினையாகக் கருதி இவ்விவகாரத்தில் அவசர அக்கறை காட்டவும்.

இவ்வாறாக யாழ்ப்பாணத்தில் உள்ள பொதுநல ஸ்தாபனங்கள் பலவும் இந்திய அரசாங்கத்திற்கு அவசர வேண்டுகோள் விடுத்துள்ளன.

ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்களை அழிப்பதற்கு யாசிக்கின்றான். அமெரிக்கா, இஸ்ரவேல் போன்ற சாத்தான்களின் உதவியை நாடுகின்றது. அப்படியானால் எம்மை அதிலிருந்து காப்பாற்றுமாறு நாம் இந்தியாவைக் கேட்பதில் என்ன தவறு இருக்கிறது என்று பொதுநல ஸ்தாபனப் பிரதிநிதி ஒருவர் வினா எழுப்பினார்.

நேற்றுப் பொதுநல ஸ்தாபனங்கள் யாழ் ஆஸ்பத்திரியை மூடுவதை நிறுத்துவதில் அக்கறை காட்டுமாறு இந்தியப்பிரதமர் திரு ராஜீவ் காந்திக்கும் தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனுக்கும் மகஜர்களை அனுப்பி வைத்தன. இன்று மேலும் பல ஸ்தாபனங்கள் யாழ் ஆஸ்பத்திரியை மூடுவதைத் தடுக்கத் தலையிடுமாறு இந்தியாவைக் கேட்க உள்ளன.

இதேவேளை யாழ் ஆஸ்பத்திரி மூடப்படு

(4ஆம் பக்கம் பார்க்க)

செய்தியாளர்கள் யாழ் வரத் தடை!

கொழும்பு, மே 5

வெளிநாட்டுச் செய்தியாளர்கள் யாழ் குடாநாட்டுக்குச்செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளது

புறக்கோட்டைகுண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து வெளிநாட்டுச் செய்தியாளர்கள் கொழும்புக்குப் படையெடுத்துள்ளனர்.

அவர்கள் யாழ் குடாநாடு சென்று நிலைமையைப் பார்க்க தேசிய பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைக் கோரினர்.

ஆனால் பாதுகாப்பு அமைச்சு அவர்களுக்கு அனுமதி வழங்க மறுத்துவிட்டது. (உ-எ)

சுபநேரம்

05-05-1987
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:-
10-56முதல் 11-56வரை
ராகுகாலம்:-
2-56 முதல் 4-26 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

தீவிரவாதிகளுக்கு இந்திய ஆயுதமா?

டிக்ஸிற் ஆட்சேபம்

புதுடில்லி, மே 4

தமிழ்த் தீவிரவாதிகளுக்கு இந்திய அரசு ஆயுதங்களை விநியோகித்து வருவதாக இலங்கை அரச சார்புப் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியிடப் பட்டிருப்பது குறித்து இந்தியா இலங்கையிடம் கடும் ஆட்சேபம் தெரிவித்திருக்கிறது.

இது தொடர்பாக கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு ஜே. என். டிக்ஸிற் இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜெயசிங்காவை நேற்றுக் காலை நேரடியாகச் சந்தித்து தமது அரசின் ஆட்சேபனையைத் தெரிவித்தார்.

இலங்கை இனப் பிரச்சினை தொடர்பாக இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும், வெளிவிவகார அமைச்சர் என். டி. திவாரியும் அண்மைக் காலத்தில் நிகழ்த்தி வரும் உருப்படியான பேச்சுக்களை அவர் ஜெயசிங்காவின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

இவற்றுக்கு மாறாக இலங்கை அரசின் உறுப்பினர்கள் சிலர் இந்திய எதிர்ப்பு உரைகளை நிகழ்த்தி வருவதையும் அவர் சுட்டிக்காட்டினார். (உ)

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 16 தமிழர்கள் படையினரால் கொலை!

கொழும்பு, மே 5

திருகோணமலை மாவட்டத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 16 தமிழர்கள் ஆயுதபடையினரால் கொல்லப்பட்டனர்.

திருகோணமலை நகரில் இருந்து வடக்கே பதினைந்து கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள [illegible] பகுதி கிராமம் ஒன்றினுள் ஆயுதப்படையினர் புகுந்து இவர்களைக் கொன்றனர் என்று வெளிநாட்டுச் செய்தி ஸ்தாபனம் ஒன்று அறிவித்திருக்கிறது.

நிலக்கண்ணி வெடியில் ஆயுதப்படையினர் சிக்கிய சம்பவம் ஒன்றைத் தொடர்ந்து பழி வாங்கும் நடவடிக்கையாக இக்கொலையைப் படையினர் செய்தனர் என்று அச் செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கிறது. (உ-எ)

சிப்பாய்கள் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், மே 5

கோட்டை இராணுவ முகாமில் இருந்து நேற்றுக்காலை 6 மணியளவில் கடற்கரை வீதிவழியாக வெளியேற முயன்ற சிப்பாய்கள் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் நடத்தினர்.

இதன் காரணமாகச் சில இராணுவத்தினர் கொல்லப்பட்டிருக்கலாமெனத் தெரிவிக்கப்படுகிறது

புலிகளின் தாக்குதல

(4 ஆம் பக்கம் பார்க்க)

அறிவித்தல்

ஷப்ரு நிதி நிறுவனம்

சகல வாடிக்கையாளர்களுக்கும்,

பாதுகாப்பான ஓர் இடத்திற்கு எமது அலுவலகத்தை மாற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்வதற்காக 207, மின்சார நிலைய வீதியில் உள்ள எமது தற்போதைய அலுவலகம் ஓரிரு தினங்களுக்கு மூடப்பட்டிருக்கும் என்பதை அறியத்தருகிறோம். மிகவிரைவில் புதிய அலுவலகம் அமைந்துள்ள இடம் குறித்து பத்திரிகைகளில் அறிவிக்கப்படும்.

பொது முகாமையாளர்
ஷப்ரு நிறுவனம்

இராணுவத் தீர்வை அரசு நாடினால் பயங்கரமான பின்விளைவு ஏற்படும்

அமைச்சர் நட்வர்சிங் இலங்கைக்கு எச்சரிக்கை

ஜெய்ப்பூர், மே 5

இராணுவத் தீர்வை இலங்கை அரசு நாடுமாயின் பாரதூரமான பின்விளைவுகளை அது எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.

இந்திய வெளியுறவு இணை அமைச்சர் நட்வர் சிங் முன்கண்டவாறு கடந்த ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

'இந்தியாவும் அதன் அயல்நாடுகளும்' என்ற பொருள் பற்றி இணை அமைச்சர் நட்வர்சிங் ஜெய்ப்பூரில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் பேசினார்.

அப்போதே இக் கருத்தை அவர் வெளியிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

இலங்கைப் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு ஒன்றையே சம்பந்தப்பட்டவர்கள் காணமுன்வர வேண்டும்.

இராணுவத் தீர்வு காணப்பட முடியாது! இலங்கை அரசு இராணுவத் தீர்வில் நாட்டம் காட்டுகின்றது. இதனால் பாரதூரமான பின்விளை

(4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

★ சின்னஞ் சிறு விளம்பரங்கள் ★

தவறிவிட்டது

சைக்கிள் தவறிவிட்டது. C N 80537 இலக்கமுடைய றலி சைக்கிள் பரந்தனில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் நா. இராசநாயகம் 70/11, இராசசிங்கம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (1849)

கொழும்பில் தமிழ்நாட்டு பிரசை கைது!

கொழும்பு, மே 5

கொழும்பு கிரிலப்பனையில் தமிழ் நாட்டுப் பிரசை ஒருவரைப் பொலிசார் கைது செய்தனர்.

இவருடன் கூட இருந்த மலையகத் தமிழர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

கிரிலப்பனை பாலத்தடியில் வைத்து பிடிபட்ட இருவரும் தற்போது தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (இ-எ)

மத்திய அரசும் நிதி ஒதுக்க வேண்டும்

சென்னை, மே 5

இலங்கைத் தமிழருக்கு உதவ தமிழக அரசு ஒதுக்கிய நிதி போதாது; கூடுதல் நிதியை மத்திய அரசும் ஒதுக்கவேண்டும்.

இப்படி திராவிடர் கழகம், தமிழ்நாடு காமராஜர் காங்கிரஸ் கூட்டாக விடுத்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

அறிக்கையில் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு வீரமணியும் தமிழ்நாடு காமராஜர் காங்கிரஸ் தலைவர் பழ நெடுமாறனும் கையெழுத்திட்டுள்ளனர்;

தமிழக முதலமைச்சர் எம் ஜி இராமச்சந்திரன் இலங்கைத் தமிழருக்கு உதவ 8 கோடி ரூபாவை ஒதுக்கியிருப்பது குறித்து இந்த அறிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-எ)

வயாவிளானில் பாதிக்கப்பட்டோர்

உயிர், உடமை பற்றிய சேத விவரங்களைப் பதிவு செய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 5

வயாவிளான் பகுதியில் வன்செயல்களால் பாதிப்புற்ற மக்கள் தமது உயிர், உடைமைகள் பற்றிய சேதவிவரங்களை அரச அதிபர் செயலகத்தில் பதிவு செய்யுமாறு வயாவிளான் ஞானவைரவர் சனசமூக நிலையத்தினர் கேட்டுள்ளனர்

பாதிக்கப்பட்ட வயாவிளான், பலாலி தெற்கு, ஒட்டகப்புலம் மக்கள் தமது இழப்புக்கள் பற்றிய விவரங்களை சத்தியக் கடதாசி மூலம் அரச அதிபருக்குத் தெரிவிக்க வேண்டும்.

இழப்புக்கள், அவை நடைபெற்ற திகதி, நஷ்டத்தின் பெறுமதி ஆகிய விவரங்கள் அடங்கிய நான்கு சத்தியக் கடதாசிப் பிரதிகளைத் தயாரிக்க வேண்டும்.

அவற்றில் ஒரு பிரதியை தாம் வைத்துக் கொள்ள வேண்டும்.

மற்றைய மூன்று பிரதிகளையும் கிராம சேவகர் அல்லது பிரஜைகள் குழு மூலம் உதவி அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்க வேண்டும்.

சேதங்களின் புகைப் படங்கள், பொலிஸ் முறைப்பாடுகள், வைத்திய அறிக்கைகள், மரண விசாரணை அதிகாரியின் அறிக்கைகள் என்பனவற்றை இணைத்திருப்போர் அப்பிரதிகளையும் இணைத்து அனுப்புதல் நல்லது

30-9-86 க்கு முன் நடைபெற்ற பாதிப்புக்களை வேறாகவும் 1-10-86 க்கு பின் இடம்பெற்ற பாதிப்புக்களை வேறாகவும் பதிய வேண்டும்.

இவ்வாறு வயாவிளான் ஞானவைரவர் சனசமூக நிலையத்தினர் பாதிக்கப்பட்ட மக்களை கேட்டுள்ளனர். (இ-ள)

வல்வையில் ஷெல் தாக்குதல் வீடுகள் சேதம்

வல்வெட்டித்துறை, மே 5

வல்வை இராணுவ முகாமிலிருந்து ஞாயிறு அதிகாலை நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் மூன்று வீடுகள் சேதமடைந்தன.

அதிகாலை ஒன்றரை மணியளவில் இந்த ஷெல் தாக்குதல் ஆரம்பமானது

பொதுமக்கள் வாழும் பகுதிகளை நோக்கியே ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது

வல்வை பசுபதி மோகன், கம்பர்மலை, வல்லிபுரம் இரத்தினசிங்கம், வல்வெட்டி எஸ். முத்துலிங்கம் ஆகியோரின் வீடுகளே பெரும் சேதத்துக்குள்ளாகின

பொதுமக்கள் பதுங்கு குழிக்குள் ஒளிந்து கொண்டதால் உயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்பட்டன

தட்டுப்பாடு

வட்டுக்கோட்டை, மே 5

யாழ் மாவட்டத்தில் உள்ள மிகப் பின் தங்கிய பாடசாலைகளின் அதிபர்கள் சேவைக் கட்டணப் பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் இல்லாததால் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

மிகக் குறைந்த சேவைக் கட்டணத்தை மாணவர்களிடமிருந்து அறவிட்டுக் கொள்ளும் சிறிய பாடசாலைகள் பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் இல்லாததால் மாணவர்களுக்கு பற்றுச்சீட்டுக் கொடுக்க முடியாத நிலையில் இருந்து வருகின்றன

மதுபோதையில் கடற்படை முகாமில் நுழைந்த நபர்!

காரைநகர், மே 5

மதுபோதையில் காரைநகர் கடற்படை முகாமிற்குள் புகுந்த நபரை கடற்படையினர் கைதுசெய்து பலாலி இராணுவ முகாமுக்கு அனுப்பி வைத்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த 30ஆம் திகதி நடைபெற்றது. நாவலங்காட்டைச் சேர்ந்த ஒருவர் அன்றிரவு 9 மணி அளவில் போராளிகளின் காவல் அரணையும் தாண்டி கடற்கரை முகாமிற்குள் சென்றுவிட்டார்

இத்தகவலை முகாமிற்கு அருகாமையில் நின்ற தொழிலாளர்களிடம் கடற்படையினர் தெரிவித்தனர்.

தொழிலாளர்கள் உதவியுடன் உறவினர்கள் முகாமுக்குள் சென்று விசாரித்த போது அவர் பலாலி இராணுவ முகாமிற்கு அனுப்பப்பட்ட செய்தி தெரியவந்ததாம். (இ-73)

"யாழ்-திருமலை பஸ் கட்டணத்தை மீளாய்வு செய்க"

யாழ்ப்பாணம், மே. 5

யாழ்ப்பாணம், கோண்டாவில் இ. போ. ச சாலையால் நடத்தப்படும் யாழ் - திருமலை பஸ் சேவைக்கான கட்டணத்தை மீளாய்வு செய்ய வேண்டும்.

தம்பலகாமம் இந்து இளைஞர் மன்றம், பிரஜைகள் குழு ஆகியவற்றின் செயலாளர் திரு ம. க. கிருஷ்ணகோபால் இவ்வாறு கேட்டுள்ளார்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றிலேயே இவ்வாறு கேட்டுள்ளார்

யாழ் - திருமலைக்கான பஸ் சேவையை, கோண்டாவில் திருமலை இ. போ. ச. சாலைகள் நடத்துகின்றன

இரு சாலைகளும் நடத்தும் சேவை ஒரே வீதியிலேயே நடைபெறுகின்றன.

இருந்தும் இரு சாலைகளும் அறவிடும் கட்டணங்கள் வித்தியாசமாக உள்ளன

கோண்டாவில் சாலையினர் 73 ரூபா 50 சதமும், திருமலைச் சாலையினர் 60 ரூபாவும் அறவிடுகின்றனர்.

பிரயாணிகளிடமிருந்து ஒரு சதமேனும் மேலதிகமாக அறவிடப்படக் கூடாது என்று போக்குவரத்து அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

எனவே கோண்டாவில் சாலையினரால் மேலதிகமாக அறவிடப்படும் பணம் பற்றி சாலை நிர்வாகம் உடன் மீளாய்வு செய்ய வேண்டும்

இவ்வாறு கிருஷ்ண கோபால் அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (க-ள)

மாணவர் மத்தியில் எழுத்தாற்றலை வளர்க்க புதிய செயற் திட்டம்

மானிப்பாய், மே 5

சிறுகதை, கவிதை, கட்டுரை முதலிய துறைகளில் ஆர்வமுடையவர்களுக்குப் பயிற்சியளித்து அவர்களின் திறமைகளை வளர்க்க படைப்புத் துறையில் மாணவர்களை ஈடுபடுத்துவதற்கான செயற்திட்டம் ஒன்றை இந்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்த நல்லூர் கல்வி வள நிலையம் முடிவு செய்துள்ளது.

நல்லூர் கல்வி வள நிலைய கல்வி அதிகாரி திரு க. சிவநாயகமூர்த்தி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாடசாலைகள் தோறும் கையெழுத்து சஞ்சிகைகளை நடத்துவதன் மூலம் படைப்பாற்றலை வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்

காலத்துக்குக் காலம் கையெழுத்து இதழ்கள் மதிப்பிடப்பட்டு பரிசு வழங்கப்படும்

போட்டியில் கலந்து கொள்ளும் பாடசாலைகள் ஒவ்வொரிதழிலும் இரண்டு பிரதிகளை அனுப்பி வைக்க வேண்டும்.

படைப்புக்கள் அனைத்தையும் மாணவரால் உருவாக்கப்பட்டவை என்பதை அதிபர், ஆசிரியர் உறுதி செய்யவேண்டும்

இப்போட்டிகளில் கலந்து கொள்ள ஆர்வமுடையவர்கள், கையெழுத்திதழின் பெயர் இதழாசிரியர் குழுவின் பெயர்கள், பொறுப்பாசிரியர் பெயர் போன்ற விவரங்களை அனுப்ப வேண்டும்.

பொறுப்பு அலுவலர், கல்வி வள நிலையம், யாழ் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு மே மாதம் 15ஆம் திகதிக்கு முன் இவற்றை அனுப்பி வைக்க வேண்டும்.

— இவ்வாறு அவர் தெரிவித்தார். (க-எ-90)

மக்கள் முகம்

இந்திராபுரம் மக்கள் சனசமூக நிலையம்

எழுதுமட்டுவாள், மே 5

முகமாலை, இந்திராபுரம் சனசமூக நிலையத்தின் முதலாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் சனசமூக நிலைய மண்டபத்தில் நிலையத் தலைவர் திரு இ. கனகசபை தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் போட்டியின்றித் தெரிவாகினர்.

தலைவர்: திரு இ. கனகசபை, உபதலைவர்: திரு. த. ஞானப்பிரகாசம். செயலாளர்: திரு. இ. கதிர்காமன். உப செயலாளர் திரு வ. விஜயரத்தினம் நூலகர்: திரு. சி. செல்லையா க. அரனி.

நிர்வாகசபை உறுப்பினர்கள் திருமதி ஜெ. மரியராணி திருமதி ஞா. மேரிமார்க்கிறேட். திரு. ச. கந்தசாமி திரு. க. தங்கராசா (இ)

ஷெல்லடிபட்ட சிறுமியின் கால் அகற்றப்பட்டது

யாழ்ப்பாணம் மே 5

கடந்த 30ஆம் திகதி ஷெல் தாக்குதலில் காயமடைந்த தம்பிராசா தயாசினிதேவி என்ற இரண்டு வயது சிறுமியின் கால் சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட்டுள்ளது. (இ-10)

கப்பலிலிருந்து இறக்கப்பட்ட பொருள்கள்

வல்வெட்டித்துறை, மே 5

ஞாயிறு காலை இரண்டு கடற்படைக் கப்பல்களில் இருந்து பெருமளவில் 'பொருட்கள்' இறக்கப்பட்டு பருத்தித்துறை இராணுவ முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

காலை 8 மணியளவில் ஆரம்பமான இறக்கும் வேலை மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாக நீடித்தது.

அப்போது பருத்தித்துறை இராணுவ முகாமில் இருந்து ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது. வேவு விமானம், ஹெலிக்கொப்டர் ஆகியன ரோந்தில் ஈடுபட்டன (இ-எ-160)

மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

நம்பிக்கையான யுத்த நிறுத்தம் உருவாக வேண்டும்

ஜே. ஆருக்கும் ராஜீவுக்கும் வேண்டுகோள்

சென்னை, மே 4

நம்பிக்கையான யுத்த நிறுத்தம் ஒன்றை உருவாக்கும்படி இந்தியப் பிரதமர், இலங்கை ஜனாதிபதி ஆகியோருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் உள்ள முன்னாள் நீதியரசர் வி. ஆர். கிருஷ்ண ஐயர் இந்தப் பகிரங்க வேண்டுகோளை விடுத்து இருக்கிறார்.

இரண்டு அரசாங்கங்களும் உறுதி மொழியின் தான் நம்பிக்கையான யுத்த நிறுத்தம் ஒன்றை உருவாக்க முடியும்.

யாழ் குடாநாட்டில் தனது சொந்த மக்கள் மீது இலங்கை அரசு பைத்தியக்காரத்தனமான விமானத்தாக்குதலை நடத்துகின்றது.

மனித உரிமை பேணுபவர்கள் இதை இனக் கொலையாகக் கணிக்க வேண்டியுள்ளது

பௌத்தம், மனிதாபிமானம் ஆகிய அடிப்படையில் பார்த்தால் அரசமைப்புக்கு மாறுவதாக, ஆக்கிரமிப்பாக இத்தாக்குதல் அமைந்துள்ளது.

இப்படி திரு கிருஷ்ண ஐயர் தனது வேண்டுகோளில் தெரிவித்திருக்கிறார். (இ-ஐ-எ)

மரணம்

வேலணை, மே 5

சரவணை தெங்கங் குளத்தில் நீந்திய ஒருவர் நீரில் மூழ்கி மரணமானார்

சரவணை சின்னமடு மாதிரிக் கிராமத்தின் வீட்டுத்திட்டத்தின் காவலாளியான நெடுந்தீவைச் சேர்ந்த திரு பரமலிங்கம் (வயது 31) என்பவரே இறந்தவர் ஆவார்.

மொனராகலை

கிராம சுவீகரிப்பு எதிர்ப்புக் கிளர்ச்சிக்கு வடக்கின் ஆதரவு

யாழ்ப்பாணம், மே 5

கரும்புச் செய்கைக்கு மொனராகலை மாவட்டத்தில் 54,000 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட சுமார் 85 கிராமங்களைச் சுவீகரிக்கும் அரசின் திட்டத்துக்கு எதிராக மாவட்ட விவசாயிகள் நடத்தும் கிளர்ச்சிக்கு இனங்களுக்கு இடையே நீதி, சமத்துவம் நிலைப்பதற்கான இயக்கத்தின் யாழ். கிளை பூரண ஆதரவு வழங்கியுள்ளது.

இது சம்பந்தமாக யாழ் கிளை அறிக்கை ஒன்றை விடுத்திருக்கிறது.

விவசாயச் செய்கைக்குரிய வளம் பொருந்திய காணிகளை சுவீகரிக்கும் அரசின் நடவடிக்கைக்கு எதிராக மொனராகலை விவசாயிகள் நடத்தும் வீரப் போராட்டத்துக்கு யாழ் கிளை பூரண ஆதரவு வழங்கியுள்ளது.

இவ் விவசாயிகளின் போராட்டத்தை அரசு பொலிஸாரைக்கொண்டு அடக்குவதை யாழ் கிளை வன்மையாகக் கண்டிக்கிறது.

அரசின் இந்த நடவடிக்கை மாவட்டத்தில் சமூக பொருளாதார சமபலம் இன்மையை ஏற்படுத்தும். அது மட்டுமல்ல பரம்பரை விவசாயிகளை கரும்புத் தோட்டங்களின் தொழிலாளர்களாகவும் மாற்றுகின்றது

இவ் விவசாயிகளின் 'தாயகம்' மொனராகலை

அவர்களின் போராட்டம் வெற்றிபெற யாழ் கிளை வாழ்த்துகிறது—

இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ-எ)

மரண விசாரணையில் நீதிவான்:

இந்த 8 வயதுச் சிறுமி பயங்கரவாதி அல்ல

யாழ்ப்பாணம், மே 5

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கொலை வெறி பிடித்து தினமும் அப்பாவிப் பொதுமக்களைக் கொன்று வருகிறார்கள் அப்படியான கொலைகளில் இதுவும் ஒன்று

இங்கு மரணமான எட்டு வயதுச் சிறுமி பயங்கரவாதி அல்லள் இது ஸ்ரீலங்கா இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட கொலை எனவும் தீர்ப்பளிக்கிறேன்.

சனிக்கிழமை யாழ் கோட்டை முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல் குண்டுக்குப் பலியான திருநாவுக்கரசு ரதி (வயது 8) மரணம் தொடர்பான விசாரணையின்பின் தீர்ப்பளித்த யாழ் நீதிவான் கனகசபை கதிரவேற்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக் கொலை தொடர்பான சந்தேக நபர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும்படி உயரதிகாரிகளுக்கு அறிவிக்குமாறு பொலிஸ் [illegible] ஆணையிட்டார். (இ-10)

தியாகம் செய்தோர் அதற்கு ஏற்றபலனைப் பெறவேண்டும்

தொண்டா கூறுகிறார்

கொழும்பு, மே 5

தியாகம் செய்தவர்களுக்கு அந்தத் தியாகத்துக்கீடானது கிடைக்க வேண்டும், இது குறித்து முஸ்லிம் தலைவர்கள் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்.

அமைச்சர் தொண்டமான் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

முஸ்லிம்களின் தனி முஸ்லிம் மாகாண சபை கோரிக்கை பற்றி கருத்துத் தெரிவிக்கையில் தான் அமைச்சர் தொண்டமான் முன்கண்டவாறு தெரிவித்தார்.

முஸ்லிம் தலைவர்களின் கோரிக்கையை யாரும் ஆட்சேபிக்க முடியாது. கோரிக்கையை முன்வைக்க அவர்களுக்கு உரிமை உண்டு.

ஆனால் தியாகம் செய்தவர்களுக்கு அந்தத் தியாகத்துக்கு ஈடானது கிடைக்க வேண்டும் அல்லவா? இது குறித்து முஸ்லிம் தலைவர்கள் சிந்திக்க வேண்டும்.

இப்படி அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார். (இ-எ)

அரசின் சதியே

தொழிலாளர் ஐக்கியம் குலைந்ததற்குக் காரணம்

காரைநகர், மே 5

தொழிலாளர்களிடம் ஐக்கியம் குலைந்திருப்பதற்கு யு. என். பி அரசின் திட்டமிட்ட சதியே காரணம்.

அரசின் சதித்திட்டத்தை உடைத்துத் தொழிலாளர்கள் ஐக்கியப்படுவதன் மூலமே தமது பிரச்சினைகளைத் தொழிலாளர் தீர்த்துக் கொள்ள முடியும்.

போக்குவரத்துச் சபை ஊழியர் திரு எஸ் சந்திரபாலு இப்படிக் கூறினார்.

காரைநகர் ஆலின் வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்ற மேதினக்கூட்டத்தில் உரைநிகழ்த்துகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

திரு. எம் ஞானநாயகம் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தைச் சேர்ந்த திரு எஸ் தேவராசா தமதுரையில் முதலாளித்துவத்தின் அடக்குமுறையை உடைத்தெறிந்து உலகத் தொழிலாளர்கள் ஐக்கியப்படுவதன்மூலமே தொழிலாளர் ஆட்சி அமைக்க முடியும் என்றார். (க-73)

கலைஞர்களின் பங்களிப்பு

போராட்டத்திற்கு அவசியம்

நிதர்சனம் சேவைப் பொறுப்பாளர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 5

தற்போது நடைபெற்று வரும் தமிழ் மக்களின் போராட்டத்திற்கு கலைஞர்களின் பங்களிப்பு மிக மிக அவசியமானது. ஆனால் எமது கலைஞர்கள் பலர் ஒதுங்கியே வாழ்கிறார்கள்.

இவ்வாறு நிதர்சனம் ஒளிபரப்புச் சேவைப் பொறுப்பாளர் பரதன் கூறினார்.

தமிழர் கலாசார வட்டத்தினரின் 'மரணம் வாழ்வின் முடிவல்ல' வீடியோ திரைப்பட முதல் திரையிட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது

இவ் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பரதன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்-

தமிழ்நாட்டில் இருந்து வெளிவரும் படங்கள் முற்போக்கானவையாகவோ, குடும்பத்துடன் இருந்து பார்க்கக்கூடியனவாகவோ இல்லை

உள்ளூர் படங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் மூலமே அப்படங்களைத் தவிர்க்கலாம் என்றார்.

யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு சி. வி. கே சிவஞானம் சிறப்புரையாற்றுகையில்,

சமூகக் குறைபாடுகளை, மக்களின் அபிலாசைகளை வீடியோ திரைப்படங்கள் மூலம் வெளிக் காட்ட வேண்டும். இதன் மூலம் எமது கலாசாரத்தையும் பேணிக் காப்பாற்றலாம் என்றார்.

கவிஞர் புதுவை இரத்தினதுரை உரையாற்றுகையில்—

ஒன்றுமே செய்யாமல் இருந்து விமர்சிப்பதை விட்டுவிட்டு, செய்யும் கலைஞர்களை நாம் பாராட்ட வேண்டும் என்றார்

திரு. அ யோ. செல்வரத்தினம் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

பேராசிரியர் சண்முகதாசன் முதற்படப் பிரதியை வழங்க, திரு எஸ். தியாகராஜா படக்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

திரு டானியல் சவுந்திரன் வரவேற்புரையும், வீடியோ திரைப்பட இயக்குனர் ரகுமாசகர் நன்றியுரையும் வழங்கினர்.

த. க. வட்டத் தலைவர் சேவராஜ் கலைஞர்களை அறிமுகப்படுத்தி பதில் உரை வழங்கினர். (உ-ள)

இனப்பிரச்சினை பற்றி புதுடில்லியில் மாநாடு

ராஜீவ் கூட்டுகிறார்

கொழும்பு, மே 5

இலங்கை இனப்பிரச்சினை பற்றி புதுடில்லியில் முக்கிய மாநாடு ஒன்று எதிர்வரும் புதன்கிழமை நடைபெறவிருக்கின்றது

இப்படி கொழும்பில் இராஜதந்திர, அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதமர் ராஜீவ் காந்தியே இம் மாநாட்டை கூட்டுகிறார்.

இனப்பிரச்சினையுடன் தொடர்புடைய மத்திய அரசின் முக்கியஸ்தர்கள் இம் மாநாட்டில் கலந்து கொள்வர் என்றும் அறிவிக்கப்படுகிறது. (இ-எ)

உதய சங்கற்பம்

பணிவிடை புரியாத வாழ்வு வாழ்வாக மாட்டாது

— தர்மசக்கரம்

உதயன்

இல,18, [illegible] ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 23078
யாழ்ப்பாணம் 05-05-1987 த.பெ.இல. 28

ஐயகோ! இப்படியும் ஓர் அநியாயமோ?

ஓர் அரசாங்கமா இப்படிச் செய்கிறது என்று நினைத்தும் பார்க்க முடியாத அநியாயமான முடிவு! அந்த அநியாயத் தீர்மானத்தை அமுல் செய்வதில் அதீத அவசரம். அந்த அவசரத்தில் பெரும் அதர்ம நோக்கம்.

ஆம். யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியை மூடிவிடுவது என்ற அரசாங்கத்தின் அக்கிரமமான முடிவு குறித்தே இங்கு பிரஸ்தாபிக்கிறோம்.

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி வடமாகாணத்தின் தலைமை வைத்திய நிலையம். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய ஐந்து தமிழ் மாவட்டங்களில் வாழும் லட்சக்கணக்கான மக்களின் உயிர்காக்கும் ஆலயம். ஓரளவேனும் நவீன வசதிகளைக் கொண்ட ஒரே ஒரு ஆஸ்பத்திரி யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியே. அதனை மூடுவது வடமாகாண மக்களுக்கு வைத்திய சேவைத் தடை போடுவதாகும்; அவர்களைக் கொல்வதற்கு ஒப்பானதாகும். அது பொருளாதாரத் தடையை விடக் கொடூரமானது.

உயிர்ப்பிச்சை வேண்டிச் சிகிச்சைக்கு வந்திருக்கும் நோயாளரைக் கொல்வது சாதாரண பிரஜையைக் கொல்வதைவிடக் காட்டுமிராண்டித்தனமானது, மிருகத்தனமானது. அதனாலேயே தேசத்துக்குத் தேசம் நடக்கும் பெரும் போர்களில் கூட ஆஸ்பத்திரிகள் தாக்கப்படுவதில்லை.

ஆனால் இலங்கை அரசு - அதன் படைகள் - சர்வதேச விதிகளையும் மீறி, காலத்துக்குக் காலம் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி மீது தாக்குதல்களை நடத்தி வந்தன. மார்ச் மாதம் 30 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதல் நெடுநேரமானது. எட்டு நோயாளரின் உயிர்களை மோட்டார் ஷெல்கள் அன்று குடித்தன.

இப்போது ஆஸ்பத்திரியையே மூடிவிட முடிவு செய்திருக்கிறது அரசாங்கம்! நோயாளர் இறப்பதைத் தவிர்ப்பதற்காக இந்த முடிவுக்குத் தான் வந்ததாக அரசாங்கம் கூறினாலும் வியப்படைவதற்கில்லை.

ஆனால் இந்த முடிவு அதர்ம நோக்கங்கள் பலவற்றைக் கொண்டது என்பது மட்டும் நிச்சயமானது. ஆஸ்பத்திரியை மூடினால் நோயாளரைக் கொன்ற அவப்பெயர் இல்லாமல் இலகுவாயும் நகர மக்களை அழிக்கலாம். அந்த அழிப்பு அட்டூழியத்தின்போது, உயிர் தப்பக் கூடியவர்களுக்கு வைத்திய வசதி செய்யாமல் உயிர்தப்பும் வாய்ப்பைக் கெடுத்து அவர்களையும் சாகடிக்கலாம். ஆபத்தான சாதாரண நோயாளருக்கும் வைத்திய வசதி இல்லாமற் செய்து அவர்களையும் சாகடிக்கலாம். எல்லாப் பக்கங்களாலும் இறக்கும் தமிழர் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்பதே பிரதான நோக்கம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கைப்பற்ற இராணுவ நடவடிக்கைகளுக்கு உத்தரவிடப்பட்டாயிற்று. வான்தாக்குதலைத் தொடருவதற்கு உத்தரவிடப்பட்டாயிற்று. அப்பாவிப் பொதுமக்கள் இராணுவத் தாக்குதலின் போது அழிவதைத் தவிர்க்க முடியாது — அதாவது பொது மக்களையும் அழிக்கவே செய்வோம் - என்று அறிவிக்கப்பட்டாயிற்று. குடாநாட்டையும், ஏனைய தமிழ்ப் பிரதேசங்களையும் அழிக்க சாத்தான்களின் உதவியும் கிடைக்கப் போகிறது. இந்த வரிசைக் கிரமமான அக்கிரமங்களுக்கு மத்தியில் ஆஸ்பத்திரி தடையாக இருக்கக் கூடாது என்று அரசு கருதியிருக்கிறது.

ஆனால் அரசு தான் நினைத்ததை எல்லாம் செய்ய விடலாமா? இப்போதிருக்கும் யாழ் ஆஸ்பத்திரியை மூடினால் ஆயிரம் ஆயிரம் தமிழர்கள் அவமாக உயிர் நீக்கநேரிடும். ஒரே இடத்தில் இருக்கும் பெரிய ஆஸ்பத்திரியை பல இடங்களுக்கு மாற்றினால் அதன் சேவை சக்தி யாவும் அற்றுப்போய்விடும்.

எனவே இந்த முடிவை வாபஸ்பெறுமாறு அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கவேண்டும். ஆஸ்பத்திரியை மூடும் முடிவை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் ஊர்வலங்கள் நடத்தவேண்டும். மக்கள் எதிர்ப்பைக் காட்டவேண்டும்.

கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள் ஒவ்வொன்றுக்கும் ஆஸ்பத்திரி மூடப்படுவதன் தாற்பரியம், பின்னணி என்பன பூரணமாகத் தெரியப்படுத்தப்படவேண்டும்.

அதி உத்தமர் உலக அபிப்பிராயத்துக்குச் செவிசாய்ப்பவராக இல்லை. சாத்தான்களை மட்டுமே கை விசிப்பிடிக்கப் பார்க்கிறார். எவ்வாறாயினும் அவர் உலக அபிப்பிராயத்துக்குப் பணியாமல் ஆட்சி நடத்துவது மிகவும் கஷ்டம்.

ஆஸ்பத்திரியை மூடினால் யாழ்ப்பாண நகரமே மூடப்பட்டதற்கு, அதனை அழிக்க அனுமதித்ததற்குச் சமனாகிவிடும்.

எனவே ஆஸ்பத்திரியை மூடுவதற்கு அனுமதியாமல், தமிழ் மக்கள் ஓரணியில் எதிர்ப்புக்குரல் கொடுக்க வேண்டும்.

அழுத பிள்ளை தான் பால் குடிக்கும்.

சில நூறு சிப்பாய்களைப் பாதுகாப்பதற்காக பல லட்சம் மக்களின் இதயத்தை இழப்பதா?

வழக்கமாக யாழ் பெரிய ஆஸ்பத்திரிக்கு மருந்துகளை அனுப்பி வைக்க வேண்டிய போதனா வைத்தியசாலை அமைச்சு மரண அறிவித்தல் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

மே 8 ஆம் திகதியுடன் யாழ் ஆஸ்பத்திரியை மூடும் நடவடிக்கைகள் பூரணமாக்கப்பட வேண்டும் என்பதே அந்த அறிவித்தல்.

வடபகுதி மக்களின் இதயமாக விளங்கிவரும் ஆஸ்பத்திரி இச்செய்தியைக் கேட்டு அதிர்ச்சியடைந்தது.

இதயத்தை மாற்றுவது போல் இதையும் இடம் மாற்ற முடியுமா?

கனவிலும் முடியாது என்றார் அரசாங்க வைத்தியர் சங்கத்தைச் சேர்ந்த யாழ் ஆஸ்பத்திரி பிரமுகர் ஒருவர்.

ஏற்கனவே ஏழு தடவைகள் இராணுவ தாக்குதல்களுக்கு ஆஸ்பத்திரி உள்ளானது.

ஒன்பது நோயாளரும் இரு ஊழியரும் பலியாகினர். பல நோயாளிகள் படுகாயமடைந்தனர்.

இந்நிலையிலும் ஆஸ்பத்திரி தொடர்ந்து இயங்கியது. காரணம் இதை வேறு எங்கும் இடமாற்ற முடியாது என்பதே.

ஏற்கனவே ஆஸ்பத்திரி ஊழியர்கள் பல போராட்டங்களை நடத்தியுள்ளனர். ஆஸ்பத்திரியைப் பாதுகாக்கவே இந்தப் போராட்டங்கள் நடைபெற்றன.

அதேபோல் தொடர்ந்தும் இதற்காக போராடுவோம் என்றார்.

யாழ் ஆஸ்பத்திரி டாக்டர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்—

ஏற்கனவே வைத்தியசாலையில் அவசர அவசிய சிகிச்சைகள் மட்டுமே நடைபெற்று வந்தன.

கட்டட வசதி

வைத்தியசாலை இடம் மாற்றுவதற்கு இதே போன்ற பாரிய விஸ்தீரணமான கட்டடவசதி யாழ்ப்பாணத்தில் எங்கும் இல்லை.

அப்படியாயின் வைத்தியசாலையை பகுதிபகுதியாக, பல பிரிவுகளாகப் பிரித்து யாழ் மாவட்டத்தில் பரவலாக நிறுவ வேண்டும்.

இது சொல்வதற்கு இலகுவானது செய்கையில்......!

சத்திர சிகிச்சை பிரிவு, மருத்துவப்பிரிவு, பிள்ளைப்பேற்றுப் பிரிவு, குழந்தை வைத்தியப் பிரிவு, முறிவு நெறிவு பிரிவு, கண் காது மூக்கு, தொண்டை சிகிச்சைப் பிரிவுகள் போன்றவை அத்தியாவசிய சேவைகள்.

இவற்றை யாழ்குடாநாட்டில் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு பிரிவாக நிறுவ வேண்டும்.

இதனால் சேவையாற்றும் வைத்தியர்களும் பிரிவுபட வேண்டும்.

சில வேளைகளில் சில நோயாளிகளுக்கு சத்திர சிகிச்சையின்போது சகல பிரிவு வைத்திய நிபுணர்களும் அருகில் இருக்க வேண்டிய தேவை ஏற்படும்.

சகல பிரிவுகளும் ஒரே மையப்படுத்தப்பட்ட வைத்தியசாலையில் மட்டுமே இது சாத்தியம்.

சகல பிரிவுகளும் ஒரே இடத்தில் நிறுவக்கூடிய வகையில் குடாநாட்டில் இடமுண்டா? இல்லை.

எக்ஸ்ரே கருவி, [illegible] சோதனைக் கூடம் என்பன சகல வைத்திய பிரிவுகளுக்கும் அவசியம்.

இங்கே அரசின் மெத்தனப் போக்கால் இவ் வசதிகள் ஏற்கனவே புறக்கணிக்கப்பட்ட நிலையில் இருக்கின்றன.

வைத்தியசாலை பிரிவு பிரிவாக-- துண்டு துண்டாக இடம்மாற்றப்பட்டால் சகல பிரிவுகளுக்கும் எக்ஸ்ரே ஆய்வுகூட வசதிகளை தனித்தனியே வழங்க முடியுமா?

தமிழ்ச்சமூகத்தைக் கொல்லாமல் கொல்வதற்காக இந்த ஆட்கொல்லி அரசு எடுத்த ஒரு முடிவுதான் இது - இவ்வாறு அவர் கூறினார்.

யாழ் வைத்தியசாலை உயர் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்-- யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கான ஒரு பெரிய பொது ஆஸ்பத்திரி இது.

இறுதி நம்பிக்கைச் சின்னம்

இருபது லட்சம் தமிழ் மக்களுக்கு இன்று இறுதியான நம்பிக்கையின் சின்னமாக இருப்பது இந்த ஆஸ்பத்திரி ஒன்றே.

இதை இருநூறு இராணுவத்தினரின் பாதுகாப்புக்காக இடம் மாற்றுவதென்பது எவ்வளவு கேவலமானது?

மிருகங்களைக் கொல்லக்கூடாது என்று ஜீவகாருண்யச் சட்டம் போட்ட இந்த அரசு எப்படி இப்படி ஒரு முடிவை எடுத்தது!

ஒரே நேரத்தில் ஆயிரத்து ஐந்நூறு நோயாளர்கள் தங்கக்கூடிய வசதியுள்ளதாக இந்த ஆஸ்பத்திரி உள்ளது.

பல அவசர அவசிய சிகிச்சைகள் தற்போது வடபகுதியில் இங்கு மட்டுமே மேற்கொள்ளக் கூடியதாக இருக்கிறது" என்றார்.

எஸ். ஜே. பி, ரட்ணதுரை

பல்கலைக்கழக மருத்துவ பீட உயர் அதிகாரி ஒருவர் கருத்துக் கூறுகையில்-

எமது மாணவர்களின் கல்விக் கனவுகளில் கட்டிய கோட்டைகள் தரப்படுத்தலால் தகர்க்கப்பட்டது.

இந்தச் சோதனைகள் மத்தியிலும் பல சாதனைகள் செய்து மருத்துவ மாணவர்கள் டாக்டர்களாக வந்து கொண்டு தான் இருக்கின்றனர்.

இவர்களுக்கென்று வடபகுதியில் உள்ள ஒரே ஒரு வைத்தியசாலை யாழ் போதனா வைத்தியசாலையே.

மாணவர் பாதிப்பு

இம் மாணவர்கள் இம் மாதம் 18 ஆம் திகதி தமது பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

நோயாளிகள் இல்லாத போதனா வைத்தியசாலையில் எப்படி செய்முறைப் பரீட்சைகள் வைப்பது?

யாழ் ஆஸ்பத்திரி இடம் மாற்றப்பட்டால் முழுமையாக ஒரே இடத்துக்கு இடம்மாற்ற முடியாது.

இதனால் மாணவர்கள் தமது மருத்துவப் படிப்பை ஒரே இடத்தில் பெறமுடியாது.

அப்படியாயின் அடுத்த ஆண்டிலிருந்து எந்த ஒரு தமிழ் டாக்டரும் உருவாக முடியாது. அரசின் இந்த முடிவு ஒரு திட்டமிட்ட இன ஒடுக்கல் நடவடிக்கையே என்றார்.

யாழ் ஆஸ்பத்திரி நிர்வாகப் பகுதி உத்தியோகத்தர் ஒருவர் கருத்துக் கூறுகையில்-

ஏற்கனவே யாழ் வைத்தியசாலையில் மருந்துத் தட்டுப்பாடு. சத்திர சிகிச்சைக்காக புதிய தியேட்டர் கட்டப்பட்டும் ஷெல் அடிக்குப் பயந்து பாவிக்கமுடியாதுள்ளது.

மேல்மாடி வார்டுகள் பாவிப்பது நிறுத்தப்பட்டு கீழ் அறைகளில் மட்டுமே நோயாளர் தங்கியுள்ளனர்.

வடபகுதியில் எது இயங்காது விட்டாலும் வைத்தியசாலை இயங்க வேண்டும். அத்தகைய சூழ்நிலை நிலவும் காலம் இது.

பனடோல் ஆஸ்பத்திரி

இதையும் நிறுத்தி இடமாற்றினால் வெறும் தடிமன், இருமல், காய்ச்சலுக்கு பனடோல், அஸ்பிரின் கொடுக்கும் ஆஸ்பத்திரியாகவே அது அமையும் என்றார்.

வைத்தியசாலைத் தாதிகளுக்குப் பொறுப்பான அதிகாரி ஒருவர் கருத்து தெரிவிக்கையில்

வைத்தியசாலை பல பிரிவுகளாக பிரிக்கப்பட்டு இடமாற்றப்பட்

(4ஆம் பக்கம் பார்க்க

சமய சந்நிதிகளில்

கண்ணகி அம்மன் கோயிலில்

யாழ்ப்பாணம், மே 5 புங்குடுதீவு ஸ்ரீ கண்ணகி அம்மன் என வழங்கும் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் கடந்த புதன்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமானது.

இம்மாதம் 12 ஆம் திகதி சித்திரத் தேர்த் திருவிழாவும் 13 ஆம் திகதி சமுத்திர தீர்த்தோற்சவமும் நடைபெறும். (இ-எ)

நாச்சிமார் கோவில் உற்சவம்

திருநெல்வேலி, மே 5 யாழ் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானத்தின் (நாச்சிமார் கோவில்) வருடாந்த மகோற்சவம் 29ம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பதினைந்து தினங்களுக்கு சிறப்பாக உற்சவங்கள் நடைபெற இருக்கின்றது.

12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரதோற்சவமும் 13ஆம் திகதி புதன்கிழமை (சித்திரைப் பூரணை) தீர்த்த உற்சவமும். 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை பூங்காவனமும் நடைபெறும். (இ-143)

ஆப்கன் பிரச்சினைக்கு பேச்சு மூலம் தான் தீர்வு

இந்தியா வலியுறுத்து

காபூல், மே 4 ஆப்கன் பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தி உள்ளது.

காபூலில் ஆப்கன் வெளிநாட்டமைச்சர் அளித்த வரவேற்பு உபசாரத்துக்குப் பதிலளித்துப் பேசுகையில் இந்திய வெளியுறவுச் செயலாளர் என். டி. திவாரி மேற்கண்ட கருத்தை மீண்டும் வலியுறுத்தினார்.

ஆப்கன் பிரச்சினைக்கு ஜெனிவாவில் நடைபெற இருக்கும் அமைதி மாநாடு முன்னேற்றகரமான முடிவுகளை எடுக்கும் என்று நம்புவதாகவும் அமைச்சர் திவாரி தெரிவித்தார். (இ-எ)

இலங்கைத் தமிழர் பிரச்சினை: மாநில முதல்வர்களுடன் ராஜீவ் கலந்தாலோசனை

புதுடில்லி, மே 4 இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, இந்திரா காங்கிரஸ் ஆட்சியில் இல்லாத ஆறு மாநிலங்களின் முதலமைச்சர்களுடன் கலந்தாலோசித்தார்.

இச் சந்திப்பு புதுடில்லியில் இடம்பெற்றது.

திரு. ராமகிருஷ்ண ஹெக்டே (கர்நாடகம்). திரு. சுர்ஜித்சிங் பர்னாலா (பஞ்சாப்) திரு ஜோதி பாசு (மேற்குவங்காளம்) திரு நிருபன் சக்கரவர்த்தி (திரிபுரா). திரு ஈ. கே. நயினார் (கேரளா) திரு என். ரி. ராமராவ் (ஆந்திரா) ஆகியோர் புதுடில்லியில் மாநாடு ஒன்று நடத்தினார்கள் அல்லவா!

அச் சமயம் பிரதமர் காந்தி, ஆறு முதலமைச்சர்களுக்கு தேநீர் விருந்தளித்துக் கௌரவித்தார்.

அப்போதே இச் சந்திப்பு இடம்பெற்றது. (இ-எ)

இஸ்ரவேல் அமைச்சரவை முடிவெடுக்கும்

டெல் அவிவ், மே 4 மத்திய கிழக்குப் பிரச்சினை குறித்து சர்வதேச மாநாடு நடத்தும் விஷயம் குறித்து இஸ்ரவேல் அமைச்சரவை எதிர்வரும் புதன்கிழமை முக்கிய முடிவு ஒன்றை எடுக்க இருக்கிறது.

எடுக்கப்போகும் முடிவு குறித்து இஸ்ரவேல் அமைச்சரவையில் பலத்த கருத்துவேற்றுமை ஏற்பட்டுள்ளது.

வெளிநாட்டமைச்சர் ஷிமொன் பெரெஸ் சர்வதேச மாநாடு நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையை ஆதரிக்கிறார். பிரதமர் ஷாமிர் அதனை எதிர்க்கின்றார்.

பொய்யாமொழி

குறள்:

சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்.

பொருள்:

பெரியோரின் இயல்பு சிற்றினத்தை அஞ்சி ஒதுக்கும்; சிறியோரின் இயல்பு [illegible] கொள்ளும்.

வெளி உலகில்

கொன்ரு கிளர்ச்சியாளருக்கு

10 கோடி டாலர் ஒதுக்க றேகன் அனுமதி கோருகிறார்

வாஷிங்டன், மே 4 நிகரகுவா அரசுக்கு எதிராகப் போராடும் கொன்ரு கிளர்ச்சிக்காரர்களுக்கு உதவ 10 கோடி டாலர் பணம் ஒதுக்க அமெரிக்க நாடாளுமன்றத்தின் அனுமதியை தாம் நாடப்போவதாக அதிபர் றேகன் அறிவித்து இருக்கிறார்.

அமெரிக்கப் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் மத்தியில் பேசுகையில் அதிபர் றேகன் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

நிகரகுவா அரசுக்கு எதிராகப் போராடும் கிளர்ச்சிக்காரர்களுக்கு வழங்கும் நிதி உதவியை நிறுத்துவது அமெரிக்காவின் நலன்களைப் பாதிக்கும் என்றும் அதிபர் றேகன் தெரிவித்தார்.

ஈரானுக்கு ஆயுதம் விற்றது, அதனால் கிடைத்த வருமானத்தை நிகரகுவா கிளர்ச்சிக்காரர்களுக்கு வழங்கி உதவியது ஆகிய ஊழல் நடவடிக்கைகள் அம்பலமானதன் பின்னர் அதிபர் றேகன் கிளர்ச்சிக்காரர்களுக்கு உதவுவது குறித்து முதல் தடவையாக கடந்த ஞாயிறு பேசினார். (இ-எ)

எல்சல்வடோரில் 9 சிப்பாய்கள் பலி!

எல்சல்வடோர், மே 4 எல்சல்வடோரில் அரசுப்படை முகாம் ஒன்றின் மீது இடதுசாரிக் கிளர்ச்சிக்காரர்கள் நடத்திய தாக்குதலில் 9 சிப்பாய்கள் உயிரிழந்தனர். (உ-ா)

கனேடிய அரசமைப்பு சட்டத்தை கியூபெக் மாநிலமும் ஏற்றது

ஒட்டாவா, மே 6 கனடாவின் அரசமைப்புச் சட்டத்தை பிரெஞ்சு மொழி பேசும் மாநிலமான கியூபெக்கும் ஏற்றுக்கொண்டது.

கியூபெக் மாநிலமானது கனடாவினுள் தனித்துவம் பொருந்திய ஒன்று என்ற கியூபெக் மாநில அரசின் கோரிக்கையைக் கனடா பிரதமர் பிரையன் மல்ரோனி ஏற்றுக் கொண்டார்.

அதைத் தொடர்ந்தே கியூபெக் மாநில அரசு, கனடாவின் அரசியல் சட்டத்தை ஏற்றுக்கொண்டது.

பத்து மாகாண முதலமைச்சர்களுடன் பிரதமர் நடத்திய மாநாட்டில் இந்த உடன்பாடு ஏற்பட்டது. (இ-எ)

டாலர் பெறுமதி நெருக்கடி

வாஷிங்டன், மே4 டாலரின் பெறுமதி குறைந்து வருவதினால் ஏற்படும் நெருக்கடியைச் சமாளிக்க வேண்டும்.

கூட்டறிக்கை ஒன்றில் அமெரிக்க அதிபர் றேகனும் ஜப்பான் பிரதமர் நாகசோனியும் இதனைத் தெரிவித்தனர்.

டாலரின் பெறுமதி தொடர்ந்து வீழ்ச்சியடைய அனுமதித்தால் உலக பொருளாதாரம் தான் பாதிக்கப்படும் என்றும் அந்தக் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

ஜப்பான் பிரதமரின் அமெரிக்க விஜயத்தின் முடிவில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

ரம்ழான் சிந்தனை

அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும். அவன் ஷைத்தானின் சூழ்ச்சிகளிலிருந்தும் தன் அடியார்களைக் காத்துப் பெருங்கருணை புரிந்திருப்பவன். அவன் தன் நேசர்களுக்கு நோன்பை ஓர் அரணாகவும் கேடயமாகவும் ஆக்கி அதன் மூலம் ஷைத்தானின் நம்பிக்கைகளை நாசமாக்கியவன். ஷைத்தானின் சதித் திட்டங்களை நிர்மூலமாக்கியவன்.

மௌலவி
ஏ. ஆர். எம். நவ்ஸீர்

மே 5 இல்
O/L Day Class (பிரிவு 4)
★ முற்றிலும் பாடசாலை போன்ற வசதியில் கல்வி கற்பிக்கப்படும்
காலை 8-00 -- 1-30 வரை
★ கல்வியின் தரத்திற்கு கடந்தகால பெறுபேறுகள் சான்றாகும்
நிரு டியூசன் சென்ரர்
கோண்டாவில்.

உதயன்

05 05 1987 செவ்வாய்க்கிழமை

A L 89 (விஞ்ஞானம்)
(பிரிவு 2)
சௌந்தி
B Sc (Hons)
செல்வா
(B. Sc. Hons)
ஏப்ரல் 25 இல் ஆரம்பம்
காலை 10-00 மணி
Niru Tuition Centre
KONDAVIL

ஆஸ்பத்திரியை மூடுவதால் பெரும் பாதிப்பு

நலன்புரிச் சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், மே 5

யாழ் போதனா வைத்தியசாலையை அரச உத்தரவுக்கிணங்க மூடுவதால் பெரும் பாதிப்பு ஏற்படும். அதன் விளைவுகள் ஸ்ரீலங்கா அரசையே சாரும்.

— இப்படி யாழ் ஆஸ்பத்திரி நோயாளர் நலன்புரிச் சங்கம் தெரிவித்துள்ளது. ஆஸ்பத்திரியை மூடுவதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து நலன்புரிச் சங்கம் அறிக்கை ஒன்றையும் தயாரித்து அரச அதிபருக்கு அனுப்பி வைத்திருக்கிறது.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் பாதிப்புகள் வருமாறு:-

★ வட பிராந்தியத்திலுள்ள சகல வசதிகளும் நவீன நிபுணத்துவ வைத்திய முறைகளும் கொண்ட ஓரேயொரு வைத்தியசாலை இதுவாகும்

★ இங்கு முழுமையாக இயங்கக்கூடிய சத்திர சிகிச்சை நிலையத்தில் தினமும் சராசரி 35 தொடக்கம் 40 நோயாளிகள் வரை சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்படுகின்றனர்.

★ தினமும் மூவாயிரம் நோயாளர்கள் வெளிநோயாளர் பகுதியிலும் உள் நோயாளர் பகுதியிலும் நிபுணத்துவ கிளினிக்கிலும் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

★ வட பிராந்தியத்தில் யாழ் ஆஸ்பத்திரியில் மட்டும்தான் கண், காது, மூக்கு, தொண்டைச் சிகிச்சை, முறிவு வைத்தியத்துக்கான சிகிச்சை ஆகியனவும் ரேசு நரம்புச் சிகிச்சையும் ஒரே இடத்தில் அளிக்கப்படுகின்றன.

★ குடாநாட்டைச் சேர்ந்த சுமார் 15 லட்சம் மக்கள் இந்த ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் வாய்ப்பைப் பெற்றிருக்கின்றனர்

★ இங்குள்ள ஏனைய வைத்தியசாலைகளிலும் பார்க்க இந்த வைத்தியசாலையில் மட்டுமே அவசர சிகிச்சைப் பிரிவும் இரத்த வங்கியும் அமைந்துள்ளன.

★ ஆயிரத்து பதினைந்து படுக்கை வசதிகளைக்கொண்ட இந்த வைத்தியசாலையில் சராசரியாக நாளொன்றுக்கு 125 நோயாளிகள் சேர்க்கப்படுகின்றனர். எழுநூற்றுக்கும் அதிகமான நோயாளர்கள் சிகிச்சை பெறுகின்றனர்

★ வட பிராந்தியத்தில் தெல்லிப்பழை வைத்தியசாலையைத் தவிர எக்ஸ் கதிர் பட நிலையம் இங்கு மட்டும் தான் விசேடமாக இயங்குகிறது.

★ கட்டட வசதிகள், மின்சார வசதிகள், அவசர சிகிச்சைப் பிரிவு, அவசர மருத்துவ பிரிவு, குழந்தைகள் பராமரிப்பு பிரிவு, இரு மருத்துவப் பிரிவு, மருந்து சேமிக்கும் களஞ்சிய அறை, நீர் விநியோகம், பிரேத அறை வசதி, தாதிகள் பயிற்சிக் கல்லூரி வசதி, மருத்துவ மாணவர் கல்வி வசதி உட்பட பல வசதிகள் முற்றாக அடங்கியிருக்கின்றன. இதனை மூடுவதால் வசதிகள் அனைத்தும் தடைப்பட்டு நோயாளர்கள் சிகிச்சை பெற முடியாமல் தினமும் இறக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

(உ-10)

எச்சரிக்கை

வாஷிங்டன், மே 4

இராணுவ நடவடிக்கையில் ஜனாதிபதி ஜெயவர்த்தனா ஈடுபட்டால் இந்தியா வெறுமனே பார்த்துக்கொண்டிருக்காது

அமெரிக்காவில் இருந்து வெளிவரும் 'யுஎஸ் நியூஸ் அண்ட் வேர்ல்ட் றிப்போர்ட்' என்ற சஞ்சிகை இப்படி எச்சரிக்கை வெளியிட்டுள்ளது. (உ-எ)

டிரோன் பயணம்

கொழும்பு, மே 4

இலங்கை நிலைமைபற்றி விளக்குவதற்காக ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியாக பிரதி வெளிநாட்டமைச்சர் டிரோன் பெர்னாண்டோ சேர்ந்து ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டிருக்கிறார்.

கடந்த ஞாயிறு பிரதி அமைச்சர் பல்கேரியாவுக்குப் பயணமானார்.

மருத்துவபீட விரிவுரைகள் நிறுத்தம்

யாழ்ப்பாணம் மே 5

யாழ் பல்கலைக் கழக மருத்துவபீட மாணவர்களின் விரிவுரைகள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளன.

18ஆம் திகதி நடைபெறவிருந்த பரீட்சைகளும் பின்போடப்பட்டுள்ளன

இவ்வாறு யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தலைவர் பேராசிரியர் சிவஞானசுந்தரம் தெரிவித்துள்ளார்.

பரீட்சைகள், விரிவுரைகள்பற்றி இறுதி முடிவுகள் 15ஆம் திகதி அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

(உ-எ)

விசாரணைக்கு அரசு இணக்கம்

கொழும்பு, மே 5

மே தினம் அன்று கொழும்பில் பொலீஸார் நடத்திய துப்பாக்கிப்பிரயோகத்தின்போது இரண்டுபேர் உயிரிழந்த சம்பவம் குறித்து நீதி விசாரணை ஒன்றை நடத்த அரசாங்கம் இணங்கியுள்ளது

மூன்று இடதுசாரிக் கட்சிகளும் இச்சம்பவம் குறித்து நீதிவிசாரணை நடத்தும்படி அரசாங்கத்தைக் கோரியிருந்தன என்பது தெரிந்ததே

(உ-எ)

இராணுவத்...

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

வுகளை இலங்கை அரசு எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.

இலங்கை இனப்பிரச்சினை இக்கட்டான நிலையில் இருக்கிறது எந்த நேரமும் வெடிக்கும் எரிமலையாக இலங்கை இருக்கிறது.

இனப்பிரச்சினையை உள்நாட்டுப் பிரச்சினையாக இலங்கை அரசு கருதலாம்.

ஆனால் இந்தியாவில் பதற்ற நிலையை இலங்கைப் பிரச்சினை ஏற்படுத்தியுள்ளது.

இஸ்ரவேலிய, பாகிஸ்தான் பாதுகாப்பு அதிகாரிகள் இலங்கை அரசுக்கு ராணுவ, ஆயுத உதவிகளை அளித்து வருகின்றனர். இது இந்தியாவுக்கு கவலை அளிக்கின்றது.

-இப்படி இந்த அமைச்சர் சொன்னார். (உ-எ)

சில நூறு சிப்பாய்களை....

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

டால் தாதிகளையும் பிரிக்க வேண்டுமே..!?

தாதிகள் குடும்பங்கள் இடமாற வேண்டும். தங்கும் வசதிகள், பிள்ளைகளின் கல்வி வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் இவை முடிகின்ற காரியமா?

தாதியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெறும் தாதிகள் என்ன செய்வது? அவர்கள் தங்கள் பயிற்சியை ஒரே இடத்தில் எப்படிப் பெறுவது? இப்படி கேள்விகளாலேயே பதில் சொன்னார் அவர்

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளர் ஒருவர் கருத்துக் கூறுகையில்—

ஏற்கனவே ஷெல் அடிபட்டு இங்கு அனுமதிக்கப் பட்டுள்ளேன்.

அப்பாவிப் பொதுமக்களை பாதுகாக்க வேண்டிய அரசு அவர்களைக் கொல்கிறது

இந்த இக்கட்டான துன்ப சூழலிலும் இந்த ஆஸ்பத்திரி ஒன்றுதான் ஓரளவு மன நிம்மதியை அளித்தது.

மருந்தை அனுப்ப வேண்டிய அரசு இப்படி ஒரு நஞ்சை முடிவாக அனுப்பியுள்ளதே என்றார்

ஏற்கனவே ஷெல் அடிபட்டு புண்பட்டிருந்த அவர் இச் செய்தியால் மேலும் புண்பட்டுப் போயிருந்தார்.

பிரஜைகள் ஒன்றிணைப்புக் குழு உறுப்பினர் ஒருவர் கருத்துக் கூறுகையில்—

இது பல தடைகளாலும் குடாநாட்டுமக்களை பட்டினி நிலைக்கு தள்ளியுள்ளது அரசு.

மின்சாரத் தடையும், வைத்தியத் தடையுமே பாக்கி இருந்தன

இன்று வைத்தியத் தடையும் வந்து விட்டது

கோட்டை முகாமிலிருந்து சிப்பாய்கள் கண்மூடித்தனமாக தாக்குவதற்கு தடையாக இருந்தது யாழ் வைத்தியசாலை ஒன்றே.

இன்று அதையும் அப்புறப் படுத்த முயன்று விட்டனர்.

இனி தமிழருக்கு எந்த வகையிலும் விமோசனம் இல்லை என்றார்.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
(T. R. R. O.)

எமது நிறுவன அலுவலகம் சேதப்படுத்தப் பட்டமையாலும், இப்பொழுது தொடர்ந்து நடைபெறும் ஆகாயத்தாக்குதல்கள் காரணமாக உதவிநாடி வருவோர் பாதிக்கப்படக் கூடுமாதலாலும், எமது நிறுவன அலுவலகத்தை அதன் இப்போதைய இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றத் தீர்மானித்துள்ளோம். புதிய அலுவலக இடம் பற்றி விரைவில் தெரிவிக்கப்படும். மறு அறிவித்தல்வரை அத்தியாவசிய உதவி தேவைப்படுவோர் பிரஜைகள் குழுக்கள் போன்ற சேமநல நிறுவனங்கள் மூலமாக செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

செயலாளர்
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
04-05-87 யாழ்ப்பாணம்
(2843)

தமிழ் மக்களைக் கொன்றொழிக்கும் அரசின் திட்டம் இது

யாழ் வர்த்தகர்கள் ஆட்சேபம்

யாழ்ப்பாணம், மே 5

தமிழ் மக்களை முற்றாகக் கொன்றொழிக்கும் அரசின் திட்டத்தின் உச்சக்கட்டமே யாழ். போதனா வைத்தியசாலையை மூடும் செயலாகும்

யாழ் வர்த்தகர்கள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

எந்தவித முன்னறிவித்தலும் மாற்றுத் திட்டமும் இல்லாமல் யாழ் போதனா வைத்தியசாலையை மூடும் முடிவு மனித நேய மற்ற இழி செயலாகும்.

அரசின் முன்யோசனையற்ற இன ஒழிப்பு சார்ந்த இந்த நடவடிக்கைக்கு சகல தமிழ் மக்களும் தங்கள் பூரண எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும்.

—இவ்வாறு வர்த்தகர் சங்கம் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது. (உ-10)

கண்மூடித்தனமான செயல் எனக் கண்டனம்

யாழ்ப்பாணம், மே 5

யாழ்-போதனா வைத்தியசாலையை மூடிவிடுவது என்பது கண்மூடித்தனமான நடவடிக்கையாகும்.

இந்த உத்தரவை அரசு உடனடியாக வாபஸ் பெறவேண்டும்.

—இவ்வாறு போதனா வைத்தியசாலைகள் அமைச்சைக் கோரி யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது

அறிக்கையின் விபரம் வருமாறு;

இப்பிரதேச மக்களின் வைத்திய தேவைக்கு இந்த ஆஸ்பத்திரியை விட்டால் வேறு வழியில்லை.

இன்று நடைபெறும் மனிதாபிமானமற்ற தாக்குதல்களுக்கு இரையாகும் மக்களுக்கு இந்த வைத்தியசாலை கலங்கரை விளக்காக செயற்படுகின்றது.

இதுமட்டுமன்றி யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவத்துறையின் போதனா வைத்தியசாலையாகவும் இது திகழ்கின்றது

இந்நிலையில் இந்த வைத்தியசாலையை மூடுதல் ஏற்கனவே சொல்லொணாத் துன்பங்களுக்கு உள்ளாகிய மக்களை மரணத்தின் விளிம்புக்குத் தள்ளுவதாகும்.

—இப்படி இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது (உ-10)

யாழ் நகர் நேற்றே வெறிச்சோடியது

யாழ்ப்பாணம் மே 5

யாழ்ப்பாண நகரம் நேற்றே வெறிச் சோடிக்காணப்பட்டது

யாழ் நகரில் நேற்றுக் காலை வெடித்த ஷெல் குண்டுகளையடுத்தும் -

யாழ் ஆஸ்பத்திரியை மூடிவிடுவதற்கு அரசு காலக்கெடு விதித்ததையும் அடுத்து நகரில் பதற்றம் நிலவியது

இதேவேளை நகரில் உள்ள கடைகளின் சொந்தக்காரர்கள் பலர் தமது கடைகளில் இருந்த பொருட்களை வேறு இடங்களுக்கு அப்புறப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தனர்.

பஸ்களோ, ஆட்டோக்களோ நகரில் நேற்று மிகமிகக் குறைந்தே காணப்பட்டன.

(உ-10)

தமிழக நேரடி உதவி

ஸ்ரீலங்காவுக்கு பகிரங்கச் சவால்

வெளிநாட்டமைச்சு கண்டனம்

கொழும்பு, மே 5

யாழ்ப்பாணத் தமிழ் மக்களுக்கு தமிழக அரசு நேரடியாக உதவ முடிவு செய்திருப்பது ஸ்ரீலங்காவின் இறைமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் விடுக்கப்பட்ட பகிரங்கச் சவாலாகும்.

இவ்வாறு வெளிவிவகார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கண்டனமும் ஆட்சேபமும் தெரிவித்திருக்கிறது.

பிரஸ்தாப அறிக்கையின் சாராம்சம் வருமாறு:-

தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் சொந்த அரசாங்கம் ஒன்றை நிறுவப் போவதாக அறிவித்ததைத் தொடர்ந்தே, எரிபொருள்தடை விதிக்கப்பட்டது ஆனால் அங்கு உணவுப் பொருள்கள் தாராளமாகக் கிடைக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் உணவு மற்றும் மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு வந்ததாலேயே தமிழ்நாடு அரசாங்கம் அப்பொருட்களை அங்கு அனுப்பி வைத்ததாக இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரி அதனை நியாயப்படுத்தி உள்ளார்.

தமிழ்நாடு அரசாங்கம் தமிழர் பிரச்சினையில் நேரடியாக தலையிடுவது ஸ்ரீலங்காவின் ஆதிபத்தியத்துக்கும் இறைமைக்கும் பெரும் சவாலாகும் அத்தோடு ஸ்ரீலங்காவின் இறைமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் பங்கம் ஏற்படுத்தப்படமாட்டாது என்ற இந்திய அரசின் வாக்குறுதிக்கு முரணானதாகும்

மொசாட்

இலங்கையில் மொசாட் இயங்குவதாக இந்திய அதிகாரிகள் குற்றம் சாட்டி வருகின்றனர் ஆனால் மொசாட் இங்கு இயங்கவில்லை.

பயங்கரவாதத்தை ஒழிக்க உதவுமாறு எல்லா நாடுகளையுமே ஸ்ரீலங்கா கேட்டிருக்கிறது தன்னுரிமையும், இறைமையும் உள்ள ஸ்ரீ லங்கா அப்படி கோருவது தவறு என்று இந்தியா கருதுகிறதா?

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (அ)

சிப்பாய்கள்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படுத்த முகாமுக்குத் திரும்பிய சிப்பாய்கள் அங்கிருந்து பயங்கரமான முறையில் ஓய்வின்றி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்

முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் குண்டுகள் மூன்றும் குறுக்குத் தெருவிலும் யாழ் மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி மைதானங்களிலும் விழுந்து வெடித்ததாகவும் தெரியவருகிறது.

டேவிட் வீதியிலுள்ள வீடு ஒன்றில் ஷெல் விழுந்ததன் காரணமாக அந்த வீடு பலத்த சேதமடைந்தது. அத்தியடியிலும் ஷெல் ஒன்று விழுந்து வெடித்தது.

நேற்று மாலைவரை இச்செய்தி எழுதப்படும் வரை விட்டுவிட்டு ஷெல் தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெற்றன.

(உ-10)

ஆஸ்பத்திரியை....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாறும் ஆயிரக்கணக்கான நோயாளர்கள் மருத்துவ வசதியின்றி உயிரிழக்க நேரிடும்

யாழ் ஆஸ்பத்திரியைச் சுற்றியுள்ள நூற்றுக் கணக்கான வர்த்தக நிறுவனங்கள், வங்கிகள் என்பனவற்றை இழுத்து மூடவேண்டி ஏற்படும்

நூற்றுக்கணக்கான ஊழியர்கள் வேலையின்றி நடு வீதியில் நிற்க வேண்டிய நிலை ஏற்படும்

ஆஸ்பத்திரியை அண்டியுள்ள பிரபல பாடசாலை மாணவர்களும் தமது கல்வி வசதியை இழக்க நேரிடும்

யாழ்ப்பாண நகரத்தை சுடுகாடாக மாற்றுவதற்கு ஸ்ரீ லங்கா அரசு திட்டமிட்டிருக்கிறது

எனவே இந்தியா இவ்விடயத்தில் அதிக அக்கறை எடுத்து ஸ்ரீலங்கா அரசின் உத்தரவை வாபஸ் பெறச் செய்வதுடன் தமிழ் மக்களையும் காப்பாற்ற வேண்டும்.

- இவ்வாறு வைத்தியப் பிரமுகர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார்

(அ-10)

தமிழ் அமைச்சர்கள் இராஜினாமாச்செய்ய நாஞ்சில் கோரிக்கை

சென்னை, மே 4

இலங்கை அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் தமிழ் அமைச்சர்கள் உடனே ராஜினாமாச் செய்ய வேண்டும்.

தமிழ்நாடு சட்டசபையில் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது

திராவிட முன்னேற்றக் கழக சட்டசபைக் குழுத் தலைவர் நாஞ்சில் மனோகரன் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

தமிழர் பிரச்சினை பற்றிய விவாதத்தில் பங்கு பற்றிப் பேசுகையில் நாஞ்சில் மனோகரன் உரையாற்றினார்.

(உ-எ)

புறக்கோட்டை குண்டுவெடிப்பு:

இளம் தமிழ்ப்பெண் பொலீஸ் விசாரணையில்

கொழும்பு, மே5

புறக்கோட்டை பஸ் நிலையக் குண்டுவெடிப்புச் சம்பந்தமாக அரசாங்க வங்கி ஒன்றில் பணிபுரியும் தமிழ் பெண் ஊழியர் ஒருவர் இரகசியப் பொலீஸாரினால் விசாரிக்கப்பட்டு வருகின்றார்.

இப்பெண் குண்டு வெடிப்பதற்கு மூன்று மணித்தியாலங்களுக்கு முன்னர் சுகயீன விடுமுறையில் செல்வதாகக் கூறிவிட்டு வங்கியை விட்டு வெளியேறியுள்ளார்.

சம்பந்தப்பட்ட வங்கிக் கிளை குண்டு வெடித்த இடத்துக்கு அருகில் அமைந்துள்ளது.

(உ-எ)

முதலாம் ஆண்டு நினைவு நாள்
(நாளை புதன்கிழமை 6-5-87)

மலர்வு:
14-1-1906

●

உதிர்வு:
17-4-1986

சங்கர நமச்சிவாயம் வைத்தியலிங்கம்

வீரவளர் வல்வெட்டித்துறையிற் பிறந்து புலைவண்டித் திணைக்களத்தில் கடமையாற்றி இந்து சமயச் சொற்பொழிவாளராகவும், சமூகத்தொண்டராகவும், ஆராய்ச்சியாளராகவும், தலைசிறந்த தமிழ் பேரறிஞராகவும், சட்டணமில்லாமல் கல்வி கற்பித்தவராகவும், தமிழ்மக்களால் 'பண்டிதர் அப்பா' என்று அழைக்கப்பட்டு வந்த நீங்கள் எங்களுக்கும் தமிழ் மக்களுக்கும் கலங்கரை விளக்கம் போல விளங்கினீர்கள் உவர்க்கடல் வற்றினாலும் உங்கள்மீது இருக்கும் எமது அன்பு வற்றாது 1987-05 06 நாளை புதன்கிழமை நடைபெறும் திவசத்தில் கலந்துகொள்ளும்படி எல்லோரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அன்பு மறவாத
மனைவி, சகோதரர், மைத்துனர்,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள், நண்பர்கள்
தெணி வல்வெட்டித்துறை, (1301)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேசன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது வெளியிட்ட திகதி 05-05-1987 தொலைபேசி இல. 24805 23078
Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA;
Registered as a Newspaper at the General Post Office. Under Number QD/ 28/ N/ 87 Telephone 24805 23078